தி.மு.க. சுற்றுச்சூழல் அணி சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பேராவூரணியில் மாட்டு வண்டி, குதிரை வண்டி எல்கை பந்தயத்தை அமைச்சர்கள் கோவி.செழியன், சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். உடன் மாவட்டச் செயலாளர்கள் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ, தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ந.அசோக்குமார் எம்.எல்.ஏ. உள்ளிட்ட கழக நிர்வாகிகள், முன்னோடிகள் உள்ளனர்.

கரூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி ஆகியோர் புதிய மின்னணு ரேஷன் கார்டுகளை பயனாளிகளுக்கு வழங்கினர். அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் கூட்டுறவு உணவு நுகர்வோர் பாதுகாப்புத்துறை மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், இயக்குனர் த.மோகன், நுகர் பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குனர் ஆ அண்ணாதுரை, கலெக்டர் மீ.தங்கவேல், எம்.பி., செ.ஜோதிமணி, எம்.எல்.ஏ.க்கள் இரா.மாணிக்கம், ஆர் .இளங்கோ, க. சிவகாமசுந்தரி, மாநகராட்சி மேயர் கவிதா கணேசன் அருகில் உள்ளனர்.

பெரியாரை இழிவாகப் பேச ஆர்.எஸ்.எஸ். – பா.ஜ.க.வால் நியமிக்கப்பட்ட கைக்கூலிகள்!

பெரியார் இல்லையென்றால் நமக்கு எந்த வாய்ப்பும் கிடைத்திருக்காது!

திருச்சி வீரவணக்க நாள் கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு பேச்சு!

திருச்சி, ஜன. 31 - பெரியாரின் கொள்கை காரணமாக ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க.வால் தமிழகத்தில் காலூன்ற முடியவில்லை. அதனால் பெரியாரை இழிவுபடுத்தி பேச ஒருவரை நியமித்துள்ளார்கள் அவர்கள் பேச்சைக் கேட்டு அவரும் பெரியாரை இழிவுப் படுத்தி வருகிறார் என திருச்சியில் கே.என். நேரு பேச்சுகையில் குறிப்பிட்டார்.

திருச்சியில் மொழிப் போர்த் தியாகிகள் நினைவு நாளை முன்னிட்டு தி.மு.க சார்பில் வீரவணக்க நாள் ஊர்வலம் மற்றும் பொதுக்கூட்டம் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு தலைமையில் நடைபெற்றது.

திருச்சி சாஸ்திரி சாலையில் தொடங்கிய ஊர்வலம்

தென்னூர் உழவர் சந்தை அருகே குழு மிக்கரை சாலையில் உள்ள கீழப்பழூவூர் சின்னசாமி மற்றும் விராலிமலை சண்முகம் ஆகியோரது நினைவிடங்களில் நிறைவடைந்தது. அங்கு அமைச்சர் கே.என். நேரு தலைமையில் தி.மு.க.வினர் மலர் வளையம் வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து நடந்த மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அந்த பொதுக்கூட்டத்தில் அமைச்சர் கே.என். நேரு பேசியதாவது:

தமிழகத்தில் இந்தியை திணிக்கப்பார்த்தார்கள். இந்தி படித்தால் தான் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றார்கள். ஆனால் இன்று இந்தி தெரிந்த வடநாட்டினர் தமிழகத்திற்கு தான் வேலைக்காக வருகிறார்கள்.

தமிழக அரசு கடன் வாங்குவது குறித்து எடப்பாடி பழனிச்சாமி பேசி உள்ளார்.

தகுதி இருந்தால்தான் கடன் வாங்க முடியும். எவ்வளவு கடன் வாங்க வேண்டும் என ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ளது. அந்த அளவிற்குதான் கடன் வாங்குகிறோம்.

தி.மு.க. அரசு பொறுப்பேற்ற பின் ரூ.10 ஆயிரம் கோடி அளவில் திருச்சிக்கு மட்டும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த 10 ஆண்டுகளில் திருச்சி மாவட்டத்தில் என்ன திட்டங்கள் செய்தார்கள் என அ.தி.மு.க.வினர் கூறட்டும்.

திராவிட மாடல் ஆட்சியில் மக்கள் திட்டங்கள் செயல்படுத்துவதால் நிதி அதிகமாகிறது.

மூன்று முறை பெரிய வெள்ளங்கள் வந்துள்ளது. அதற்கான நிவாரண பணிகளுக்கு முழுமையாக தமிழக அரசுதான் நிதி ஒதுக்கியது. ஒன்றிய அரசு நிவாரண நிதி வழங்குவதே இல்லை.

தி.மு.க. அரசு பொறுப்பேற்றதிலிருந்து அறிவித்த, அறிவிக்காத வாக்குறுதிகள் என 393 வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளது.

இந்தியாவில் மகளிருக்கான உரிமை தொகையை தமிழகத்தில் முதலமைச்சர் வழங்கினார்கள். அதனை கர்நாடக, மஹாராஷ்டிரா மாநிலங்கள் பின்பற்றுகின்றன.

தி.மு.க. அரசு கடன் வாங்கினாலும் மக்களுக்கான திட்டங்களைதான் செயல்படுத்தி வருகிறோம்.

ஒன்றிய அரசு நிறைவேற்றிய 'டங்ஸ்டன்' சுரங்க சட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தது அ.தி.மு.க.தான்.

தி.மு.க. வை எந்த தேர்தலிலும் எதிர்க்கட்சிகள் லேசா விடவில்லை. எல்லா தேர்தல்களிலும் போராடி தான் தி.மு.க. வெற்றி பெற்றது.

ஒவ்வொரு முறை வெற்றி பெறும் போதும் மிகப்பெரிய வெற்றி தான் தி.மு.க. பெற்றது.

ஆர்.எஸ்.எஸ், பா.ஜ.க.வால் தமிழகத்தில் காலூன்ற முடியாததற்கு காரணம் தந்தை பெரியார் தான். அவர்கள், பெரியாரை இழிவாக பேச வேண்டும் என ஒருவரிடம் கூறியுள்ளார்கள். அதனை கேட்டு அந்த நபர் பெரியாரை இழிவுப்படுத்தி பேசி வருகிறார்.

பெரியார் இல்லையென்றால் நமக்கெல்லாம் எந்த வாய்ப்பும் கிடைத்திருக்காது. மோசமான நிலையில்தான் நாம் இருந்திருப்போம்.

சினிமாவிலிருந்து வந்த ஒருவர் பரந்தூரில் விமான நிலையம் அமைக்கக் கூடாது என தமிழக அரசுக்கு உத்தரவு போடுகிறார்..

எந்தத் தியாகமும் செய்யாமல் முதலமைச்சர் கனவு காண்கிறார்கள்.

புதிதாக அரசியலுக்கு வந்த நடிகரை கூட்டணிக்கு அழைத்து கொண்டு தி.மு.க. வை வீழ்த்தலாம் என அ.தி.மு.க. முயற்சி செய்து கொண்டுள்ளது

தி.மு.க.வை எதிர்க்க எத்தனை கூட்டணி சேர்ந்தாலும் எவ்வளவு பேர் எதிர்த்தாலும் மீண்டும் தி.மு.க. தான் ஆட்சி அமைக்கும்.

15 ஆண்டு காலம் மாறாத ஒரே கூட்டணி தி.மு.க. கூட்டணி. கூட்டணியை முதலமைச்சர் சரியாக வழிநடத்தி வருகிறார். கடந்த காலங்களை போலவே வரும் காலங்களிலும் இந்தக் கூட்டணி தான் வெற்றி பெறும்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பேசினார்.

மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் ஊர்வலம் மற்றும் பொதுக்கூட்டத்தில், ஆயிரத்திற்கும் மேற்பட்ட தி.மு.க.வினர் கலந்து கொண்டனர்.

பேரிடருக்குப் பிந்தைய

நிரந்தர சீரமைப்புப் பணிக்கான சேத மதிப்பீட்டுக் குழுவுடன் ஆலோசனைக் கூட்டம்!

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜன 31 - பேரிடருக்கு பிந்தைய நிரந்தர சீரமைப்பு பணிக்கான சேத மதிப்பீடு குழுவுடன் (Post Disaster Needs Assessment) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

ஃபெஞ்சல் புயலின் காரணமாக சேதத்திற்குள்ளான கட்டமைப்புகளை நிரந்தரமாக சீரமைக்க, பேரிடருக்கு பிந்தைய சேத மதிப்பீடு குறித்த ஆய்வை மேற்கொள்ள தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்ட 13 வல்லுநர்களையும், தமிழ்நாடு அரசின் பல்துறை அலுவலர்களைக் கொண்டும் அரசு ஆணை எண்.31, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 21.01.2025ன் படி ஒரு குழு அமைக்கப்பட்டது. 22.01.2025 அன்று சென்னை வந்த இந்த வல்லுநர் குழு, தமிழ்நாடு அரசின் பல்துறை அலுவலர்களுக்கு 23.01.2025 அன்று பேரிடருக்கு பிந்தைய சேத மதிப்பீடு ஆய்வை மேற்கொள்வது குறித்து பயிற்சி அளித்தது.

பின்னர் இக்குழு 24.01.2025 முதல் 26.01.2025 முடிய விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் ஃபெஞ்சல் புயலின் காரணமாக ஏற்பட்ட சேதங்களை நிரந்தரமாக சீரமைக்கும் நோக்கில் நேரில் சென்று மதிப்பீடு செய்தது.

ஏற்கெனவே, ஃபெஞ்சல் புயலின் காரணமாக ஏற்பட்ட தற்காலிக சேதங்களை மதிப்பீடு செய்ய ஒன்றிய அரசின் பல்துறை குழுவானது கடந்த டிசம்பர் மாதம் ஆய்வை மேற்கொண்டது. ஃபெஞ்சல் புயலின் காரணமாக ஏற்பட்ட சேதங்களை தற்காலிகமாக சீரமைக்கவும், நிவாரணம் வழங்கவும் ரூ.3104 கோடியும், நிரந்தர சீரமைப்புப் பணிகளுக்கு ரூ.3681 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யக் கோரி ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு அரசால் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

27.01.2025 அன்று, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், பேரிடருக்கு பிந்தைய நிரந்தர சீரமைப்பு பணிக்கான சேத மதிப்பீடு குழுவுடன் (Post Disaster Needs Assessment) சென்னை, எழிலகத்தில் கலந்தாலோசித்தார்.

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்ட 13 வல்லுநர்களையும், தமிழ்நாடு அரசின் பல்துறை அலுவலர்களையும் PDNA அறிக்கையினை விரைந்து சமர்ப்பிக்க கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாடு அரசு, இந்த அறிக்கையினை ஒன்றிய அரசுக்கு சமர்ப்பிப்பதன் மூலம் புயலால் ஏற்பட்ட சேதங்களை நிரந்தரமாக சீரமைக்க தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெறவும், இதன் மூலம் பேரிடரினால் சேதமடைந்துள்ள பல்வேறு உட்கட்டமைப்புகளை தற்காலிக தொழில் நுட்பங்களை உட்படுத்தி சிறந்த முறையில் மீட்டுருவாக்கம் (Build Back Better) செய்ய வாய்ப்புள்ளது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தின் போது, கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் ராஜேஷ் லக்கானி, பேரிடர் மேலாண்மை இயக்குநர், வ.மோகனச்சந்திரன் மற்றும் பல்துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

பெரம்பலூர் மாவட்டம் – ஊரகப் பகுதிகளுக்கான 3ஆம் கட்ட 'மக்களுடன் முதல்வர்' திட்டமுகாம்!

505 பயனாளிகளுக்கு ரூ.3.94 கோடியில் அரசு நலத்திட்ட உதவிகள்!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் – சி.வி.கணேசன் வழங்கினர்!

பெரம்பலூர் ஜன, 31 - தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் பெரம்பலூர் மாவட்டத்திற்குட்பட்ட மேலப்புலியூர், தேவையூர், கை.களத்தூர், நூத்தப்பூர், வெங்கலம் ஆகிய ஊராட்சிகளில் ஊரக பகுதிகளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் கிரேஸ் பச்சாவ் தலைமையில் தொடங்கி வைத்து, 505 பயனாளிகளுக்கு ரூ.3.94 கோடி மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

இதில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் முன்னிலை வகித்தார்.இதில் போக்குவரத்துத்துறை அமைச்சர் பேசுகையில்,

முதலமைச்சர் அவர்கள் எழை எளிய அடித்தட்டு மக்களுக்கான திட்டங்களை வகுத்து வழங்குதில் இந்தியாவிலேயே முதன்மை முதலமைச்சராக திகழ்ந்து வருகிறார்கள். கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பாக இந்தியா டுடே நாளிதழ் யார் சிறந்த முதல்வர் என்ற கணக்கெடுப்பை நடத்தியது. இதில் பல்வேறு மாநிலங்களை சேர்ந்த பொது மக்களும் முதலமைச்சர் அவர்கள்தான் சிறந்த முதலமைச்சர் என வாக்களித்துள்ளனர். அதேபோல இந்த ஆண்டு ஒரு தரப்பட்டியல் தயார் செய்தபோது, அதிலும் முதலமைச்சர் அவர்களே முன்னணி முதலமைச்சராக உள்ளார்கள்.

முதலமைச்சர் அவர்கள் மக்களுடைய மனம் அறிந்து, அவர்களுடைய நலனுக்கான திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். பொதுமக்கள் அரசு சார்ந்த உதவிகளை பெறுவதற்கு அரசு அலுவலகங்களை தேடிச் சென்ற காலம் மாறி தற்போது அரசு அலுவலர்கள் பொதுமக்களை தேடி வந்து அவர்களது தேவைகளை பூர்த்தி செய்யும் சிறப்புமிகு முகாமான, "மக்களுடன் முதல்வர்" என்ற முகாமினை நடத்திட உத்தரவிட்டுள்ளார்கள்.

"மக்களை தேடி மருத்துவம்" என்ற திட்டத்தின் கீழ் நோயாளிகள் மருத்துவரை தேடிச்சென்ற காலம் மாறி தற்போது மருத்துவர்கள் நோயாளிகளை தேடி வந்து அவர்களது நோய்களை கண்டறிந்து குணப்படுத்தி வருகிறார்கள். கொரோனா காலகட்டத்தில் கல்வி கற்க முடியாமல் இருந்த குழந்தைகளின் திறனை மீண்டும் சீர் செய்யும் வகையில் "இல்லம் தேடி கல்வி" என்ற திட்டத்தினையும் முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்தார்கள்.

இதுபோன்று பொதுமக்களுக்காக உழைக்கின்ற முதலமைச்சராக, பொதுமக்களுக்கு தேவையான திட்டங்களை செயல்படுத்துகின்ற முதலமைச்சராக முதலமைச்சர் அவர்கள் திகழ்ந்து வருகிறார்கள். முதலமைச்சர் அவர்கள், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சரை பெரம்பலூர் மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற தொகுதியில் மக்களுடன் முதல்வர் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திதர அறிவுறுத்தப்பட்டதன் அடிப்படையில் இந்த முகாம் நடைபெற்று வருகிறது.

இதையடுத்து மறுநாள் குன்னம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மக்களுடன் முதல்வர் முகாம்கள் நடைபெறவுள்ளது. இம் முகாம்களை பயன்படுத்தி பொதுமக்கள் அனைவரும் தங்களது கோரிக்கைகளை மனுக்களாக அளித்து பயன்பெற வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

மேலப்புலியூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் நடைபெற்ற முகாமில் 200 நபர்களுக்கு ரூ.1,76,18,773 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், தேவையூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் நடைபெற்ற முகாமில் 81 நபர்களுக்கு ரூ.54,31,653 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், கை.களத்தூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் நடைபெற்ற முகாமில் 93நபர்களுக்கு ரூ.72,18,442 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், நூத்தப்பூரில் நடைபெற்ற முகாமில் 58 நபர்களுக்கு ரூ.45,78,379 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், வெங்கலம் சமுதாயக்கூடத்தில் நடைபெற்ற முகாமில் 73 நபர்களுக்கு ரூ.44,93,753 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும் என மொத்தம் 505 பயனாளிகளுக்கு வருவாய்த்துறையின் மூலம் பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா, மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், சமூக நலத்துறையின் மூலம் தாலிக்கு தங்கம், தையல் இயந்திரம் வழங்கும் திட்டம், தோட்டக்கலைத்துறையின் மூலம் வெங்காயக்கொட்டகை அமைக்க ஆணைகள், வேளாண் பொறியியல் துறையின் மூலம் இடுபொருட்கள் மற்றும் வேளாண்இயந்திரங்கள் என பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.3.94 மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை அமைச்சர்கள் வழங்கினார்கள்.

மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல் பிரபு, சார் ஆட்சியர் சு. கோகுல், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெக தீசன்,

மகளிர் திட்ட இயக்குநர் அ.அமுதா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பா.துரைசாமி எம்.ராஜ்குமார், அட்மா தலைவர் சி.இராஜேந்திரன், நகர் மன்றத்துணைத்தலைவர் து.ஆதவன்(எ)ஹரிபாஸ்கர்,

சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் (பொ)சு.சொர்ணராஜ், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் சுந்தரராமன், ஆதிதிராவிடர் நல அலுவலர் வாசுதேவன், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ரெ.சுரேஷ் குமார் தாட்கோ மேலாளர் த.கவியரசு சமூக நல அலுவலர் ஜெயஸ்ரீ, முன்னாள் ஊராட்சி ஒன்றிய குழு பெருந்தலைவர்கள் ஊராட்சி மன்ற தலைவர்கள் ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கோவை கரும்புக்கடை பகுதியில் இஸ்லாமியா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற,பள்ளியின் 45 வது ஆண்டு விழா நிகழ்ச்சியில் தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி,வாழ்த்தி, சிறப்புரையாற்றினார்.இந்நிகழ்ச்சியில், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா. கார்த்திக், தமிழ்மறை இஸ்லாமியா கல்வி டிரஸ்ட் சேர்மன் முகமது அனீபா, துணை சேர்மன் பி.எஸ்.உமர்பரூக், தாளாளர் ஹக்கீம்,இஸ்லாமியா மெட்ரிக் பள்ளி தலைமை ஆசிரியை சசிகலா ராணி, வடக்கு மாவட்டப் பொருளாளர் ரஹ்மான் கரும்புக்கடை சாதிக் கவுண்டம்பாளையம் சரத் ,இளைஞரணி மனோஜ் , கண்ணன், என்.வி.எஸ்.செந்தில்குமார்,கோவை அபு கழக நிர்வாகிகள், இஸ்லாமியா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்,ஆசிரியைகள், மாணவர்கள், மாணவிகள் கலந்து கொண்டனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், செங்குறிச்சி சுங்கச்சாவடி அருகில் கூட்டுறவுத் துறையின் சார்பில் பெரும்பலநோக்கு கூட்டுறவு கடன் சங்கம் மூலம் வனப் பொருட்கள் விற்பனை மையம் அமைத்தல் மற்றும் நகர் கூட்டுறவு கடன் சங்கக் கட்டிடத்திற்கு இடம் தேர்வு செய்யும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜெ. மணிக்கண்ணன் ஆகியோர் நேற்று முன்தினம் (29.01.2025) புதன்கிழமை அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள், இந்த ஆய்வின்போது கோட்டாட்சியர் ஆனந்தகுமார் சிங், நகர மன்ற தலைவர் திருநாவுக்கரசு மற்றும் அரசு அதிகாரிகள்,துறை சார்ந்த அலுவலர்கள் உடன் உள்ளனர்.